**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 708/2022 PW . 4**

Name : நாகப்பன் Fathers Name : முத்தைய்யா

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2024

**1ம் எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை:**

நான் கொத்தமங்கலத்தில் வசித்து பேங்கில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன். தேதி நினைவு இல்லை. டிசம்பர் மாதம் 2016ம் வருடம் நானும் எனக்கு தெரிந்த செல்லப்பன் என்பவரும் விசேஷ வீட்டில் கலந்துகொண்டு நாங்கள் இருவரும் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது செட்டிநாடு போலீசார் எங்களை தொடர்பு கொண்டு ஆஜர் எதிரி உட்பட மற்றொரு நபரும் சேர்ந்து ஈடுபட்ட பல்வேறு மற்றும் திருட்டு மற்றும் கொள்ளை சம்பவம் குறித்து விசாரணை செய்வதாக சொன்னார்கள். செட்டிநாடு காவல்நிலையம் நாங்கள் இருவரும் சென்றோம். அப்போது ஆஜர் எதிரி உட்பட நான்கு நபர்களை பிடித்து வழக்கு சம்பவமாக விசாரித்துக்கொண்டிருந்தார்கள். விசாரணையில் ஆஜர் எதிரியானவர் எந்தவித தூண்டுதலும் இன்றி தன்னிச்சையாக தான் செய்த திருட்டுக்குற்றங்களை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஆய்வாளர் அதனை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன். அது அதசாஆ. 2** ஆகும். அன்றையதினமே எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நேமத்தான்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் எதிரி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்துக்களை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அத்தாட்சிகளில் கைப்பற்றினார்கள். அங்கு போலீசார் தயார் செய்த **அத்தாட்சி மகஜர்களில் நான் கையெழுத்து செய்தேன். அதில் உள்ள முதலாவது கையெழுத்து அதசாஆ. 3 மற்றும் 4** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

இந்த வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்திற்கு சென்ற போதே எங்கள் முன்னிலையில் எதிரிகள் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதனை ஆய்வாளர் எழுதினார். இந்த வழக்கு சம்பந்தமாக என்ன பொருட்கள் கைப்பற்றினார்கள் என்றால் நாங்கள் அப்போது அங்கு இல்லை. அதனால் எனக்கு தெரியாது. என் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை: இல்லை.